அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர் – 608 002

(தேசிய தர மதிப்பீட்டு குழுவின் 'A+' தரச்சான்று பெற்ற பல்கலைக்கழகம்)

## சுற்றறிக்கை

'இ'-7/2026

தேதி : 10.09.2026.

பொருள் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியர்களுக்கான தமிழ்நாடு அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் NHIS-2026 அமலாக்கப்படுவது – தொடர்பாக.

பார்வை : உயர்திரு. பதிவாளர் அவர்களின் ஆணை நாள் : 09.09.2026.

-------

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியர்களுக்கான தமிழ்நாடு அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் NHIS-2026 அரசாணையின்படி G.O. Ms.No.122, Finance, (Health Insurance) Department, dated 24th June 2026.

**அரசாணையின் முக்கிய அம்சங்கள்:**

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியர்கள் அனைவரும் இந்த புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயனடைவார்கள்.
2. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியர்களின் மாத ஊதியத்திலிருந்து (மாதம்தோறும்) ரூ.390/- (ரூபாய் முன்னூற்றுத் தொண்ணூரு மட்டும்) மேற்கூறிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு ஜூலை-2026. முதல் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.
3. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான வருடாந்திர காப்பீட்டுத் தொகை ஒரு நிரந்தர ஊழியருக்கு ஆகக் கூடுதல் ரூ.4500/- + ரூ.180/-= ரூ.4,680/- பிடித்தம் செய்யப்பட்டு காப்பீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது. மேலும், சரக்கு மற்றும் சேவை வரி **18%** பல்கலைக்கழகத்தின் சார்பாக ஒவ்வொரு ஊழியருக்கும் வருடம் **ரூ.810/-** வீதம் வழங்கப்படுகிறது.
   [ (i.e.,) ரூ.375/- x 12 மாதங்கள்= ரூ.4500/- ஊழியர்களிடமிருந்தும் மற்றும் பல்கலைக்கழகத்தின் சார்பாக முதன்மை/ தொகுப்பு நிதி (Corpus Fund) வருடத்திற்கு ஒரு ஊழியருக்கு ரூ.180/- (ரூ.15/-x12 மாதங்கள்= **ரூ.180/-**) ]
4. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியர்களுக்கான அரசாணையில் இடம்பெற்றுள்ள மருத்துவ சிகிச்சைகளை அரசாணையில் இடம்பெற்றுள்ள மருத்துவமனைகளில் மட்டுமே ஐந்து வருடங்களுக்கு (01.07.2026 to 30.06.2031) சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.
5. புதிய மருத்துவக் காப்பீட்டிற்கான அரசாணையின்படி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களும் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம், ஊழியர்களின் தகுதியான குடும்ப உறுப்பினர்களின் விபரங்கள் கீழ்வருமாறு :
   1. ஊழியர்களின் சட்டப்படியான கணவர் அல்லது மனைவி.
   2. ஊழியர்களின் குழந்தைகள் (25 வயதுக்குட்பட்டவர்கள் அல்லது திருமணம் ஆகும்வரை அல்லது பணியில் சேரும் வரை.)
   3. திருமணம் ஆகாத ஊழியர்களின் பெற்றோர்கள்.
6. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர மற்றும் அயற்பணி ஆசிரியர், ஊழியரகளின் மேற்கூறிய குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை www.annamalaiuniversity.ac.in staff portal login செய்து click Family Registration-NHIS 2026 என்ற link-ல் அண்ணாமலைப்பல்கலைக்கழக இணையத்தளத்தின்வாயிலாக பூர்த்தி செய்து, அளிக்க சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் **25.09.2026**-ம் தேதிக்குள் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரியும் அனைவரையும் மேற்கண்ட தகவல்களை தவறாமல் அளிப்பதை அந்தந்த துறைத் தலைவர்கள் மற்றும் பிரிவு அதிகாரிகள் உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர் (பொ.)

பெறுநர்

1. அனைத்து புல முதல்வர்கள் அவர்கள்,
2. தேர்வு கட்டுப்பாடு அதிகாரி அவர்கள்,
3. இயக்குநர் அவர்கள், தொலைதூர மற்றும் இணையவழி கல்வி மையம்,
4. அனைத்து துறைத் தலைவர்கள் அவர்கள்,
5. முதல்வர் அவர்கள், ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி
6. முதல்வர் அவர்கள், ராஜா முத்தையா பல் மருத்துவக்கல்லூரி
7. மருத்துவக் கண்காணிப்பாளர் அவர்கள், ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி
8. ஒருங்கிணைப்பாளர் அவர்கள், விடுதி பாதுகாவலர்கள் குழுமம்
9. நெறிமுறை அலுவலர் அவர்கள்
10. மக்கள் தொடர்பு அலுவலர் அவர்கள்
11. அனைத்து கண்காணிப்பாளர்கள்

இச்சுற்றறிக்கையினை சுற்றுக்குவிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல் :
1. மாவட்ட வருவாய் அலுவலர் / இணைப்பதிவாளர் அவர்கள்,
2. நிதி அலுவலர் அவர்கள்
3. இயக்குநர் அவர்கள் புதுமைப் புகுத்தல் மையம்
4. இணை/துணை நிதி அலுவலர்கள்
5. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் அவர்கள்
6. பதிவாளரின் நேர்முக உதவியாளர் அவர்கள்

ANNAMALAI UNIVERSITY

| From | To |
| --- | --- |
| The Registrar,<br>Annamalai University<br>Annamalainagar – 608 002. | The Director,<br>Annamalai University Digital Information Centre (ADIC)<br>Annamalai University<br>Annamalainagar – 608 002. |

E-7/ NHIS/2026-2027

09.09.2026.

Sir,

Sub: Annamalai University – 'E' Section – New Health Insurance Scheme (NHIS) 2026 – Enrolment of University Staff and their eligible family members – Requesting Annamalai Digital Information Centre (ADIC) to create data upload module in the University Website Staff Portal – Regarding.

Ref. : G.O. Ms.No.122, Finance, (Health Insurance) Department, Government of Tamilnadu, dated 24th June 2026.

---------

You are requested to configure a specialized link/form within the employee login area of the Staff Portal containing necessary fields as per the model excel sheet enclosed along with in order to process the insurance cards (e-cards) for the implementation of New Health Insurance Scheme 2026.

.

Yours faithfully,

9/9/26

**Registrar (i/c)**

2/2

9/9/26 09/09/26

Encl.: Model Excel Sheet.